24.03. 2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.31

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | | |
| த/பெ | நடராஜன் | | |
| கிராமம் | பாண்டிச்சேரி | தொழில் | |
| தாலுக்கா | பாண்டிச்சேரி | வயது | 57 /2025 |
| மாநிலம் | பாண்டிச்சேரி | தேதி | 24.03.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரத்தில் உள்ள காவல் துறை நுண்ணறிவு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014- ம் வருடம் விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தேன். அப்போது கடந்த 2013- ம் ஆண்டு ஜுன் மாதம் இரயில்வே காவல் நிலையத்தில் பணியமர்த்தப்பட்டேன். அதற்கு முன்பு கடலூர் புறக்காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். அதன் பிறகு 24.05.2014- ம் தேதி விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிமாறுதல் ஆகிவந்தேன். 01.06.2014- ம் தேதி முதல் என்னை அந்த காவல் நிலையத்தில் நிலைய எழுத்தராக நியமித்தார்கள். எனக்கு அங்கு ஆவணங்களை பராமரிப்பது மற்றும் அடுத்த நாள் காவலர் பணி குறித்து முதல் நாளே மறுநாள் பணி அலுவல் குறித்து பணி உத்தரவு போட்டுவிடும் பணியாகும். விழுப்புரம்

சிபிசிஐடி ஆய்வாளர் சரவணகுமார் அவர்கள் 01.05.2014- முதல் 31.05.2014 வரையிலான காவல் நிலைய 1) பொது நாட்குறிப்பு ( ஜி.டி) 2) பணி ஒதுக்கீடு பதிவேடு ( டியுட்டி ரிஜிஸ்டர்) 3) பிஎஸ்ஆர் பதிவேடு 4) எப்.ஐ.ஆர் இன்டெக்ஸ் பதிவேடு 5) ரப் டியுட்டி ரிஜிஸ்டர், 6) சுற்றுக்காவல் பதிவேடு ஆகியவைகளை அவர் கேட்க நான் ஆய்வாளர் உத்தரவு படி கொடுத்தேன். அதை பெற்றுக்கொண்டு புரொடக்க்ஷன் மெமோ தயார் செய்து அதில் என்னிடம் ஆய்வாளர் சரவணக்குமார் என்னிடம் கையொப்பம் வாங்கி அதை பெற்றுக்கொண்டார். மேற்படி 6 ஆவணங்கள் ஜெயவேல் இறந்த வழக்கு , காவல் நிலைய குற்ற எண். 25/2014 , 26/2014 – குறித்தும் விசாரணைக்காக கேட்டார்கள். ஆவணங்களில் எந்த திருத்தமும் செய்யக்ககூடாது என்றால் சரிதான். அந்த புரொடக்க்ஷன் மெமோ வில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த ஆவணம் ஆகும். அந்த புரொடக்க்ஷன் மெமோ வில் உள்ள இரு கையெழுத்துகள் என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் 1) பொது நாட்குறிப்பு ( ஜி.டி) அ.சா.ஆ. 13 ஆகவும், 2) பணி ஒதுக்கீடு பதிவேடு ( டியுட்டி ரிஜிஸ்டர்) அ.சா.ஆ. 14 ஆகவும், 3) பிஎஸ்ஆர் பதிவேடு அ.சா.ஆ. 15 ஆகவும், 4) எப்.ஐ.ஆர் இன்டெக்ஸ் பதிவேடு அ.சா.ஆ. 16 ஆகவும், 5) ரப் டியுட்டி ரிஜிஸ்டர் அ.சா.ஆ. 17 ஆகவும், 6) சுற்றுக்காவல் பதிவேடு அ.சா.ஆ. 18 ( அந்த பதிவேட்டில் பக்கம் 187 மட்டும் அ.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த புரொடக்க்ஷன் மெமோக்கள் 2 முறையே அ.சா.ஆ. 19 மற்றும் 20 ஆகும். இது சம்மந்தமாக என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள். நான் நடந்ததை கூறினேன். இந்த ஆவணங்களுக்கு யார் பொறுப்பு என்றால் ஆய்வாளர் தான்

இவற்றுக்கு பொறுப்பு ஆவார். 01.05.2014- முதல் 31.05.2014- வரை காவல் நிலைய பதிவேடுகளில் உள்ள பக்கங்கள் காணாமல் போனது பற்றி என்னிடம் போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை.

<u>3- ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்கள் நிலைய ஆய்வாளரிடம் சிபிசிஐடி ஆய்வாளர் சரவணகுமாரிடம் இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண். 25/2014, 26/2014- வழக்கு தொடர்பான ஆவணங்களை எதன் அடிப்படையில் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எழுத்துப்பூர்வமான வேண்டுகோள் ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. தற்போது வாய்மொழியாக கூட எதன் அடிப்படையில் இருப்பு பாதை காவல் நிலைய பொறுப்பில் இருந்த மேற்படி வழக்குகளை விழுப்புரம் சிபிசிஐடி - க்கு மாற்றப்படுவதாகவும், அதை உடனடியாக சரவணகுமாரிடம் ஒப்படைக்க வேண்டுமென உயர் அதிகாரியின் உத்தரவு ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. இந்த ஆவணங்களை 21.11.2014- ல் தான் ஒப்படைக்கிறோம் என்றால் சரிதான். அந்த புரொடக்ஷன் மெமோவில் எந்த உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில்ஒப்படைக்கப்படுகிறது என்ற விவரம் உள்ளது என்றால் சரிதான். 21.11.2014- ல் நான் பிஎஸ்ஆர் புத்தகத்தை ஒப்படைத்தது போல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.08.2014- தேதியில் பொது நாட்குறிப்பு, சுற்றுக்காவல் விடுப்பு பதிவேடு, 01.05.2014 முதல் 31.05.2014 வரையிலான ரப் டியுட்டி ரிஜிஸ்டர் மொத்தம் 31 நாட்கள், நான்காவதாக இருப்புப்பாதை காவல் நிலைய டியுட்டி ரிஜிஸ்டர் ஜனவரி 2014 – முதல் ஆகஸ்ட் 23- ம் தேதி 2014 வரை மொத்தம் 125 பதிவுகள் , 2014- ம் ஆண்டிற்கான

எப்.ஐ.ஆர் இன்டெக்ஸ் ஆகியவற்றை ஒப்படைத்ததாக உள்ளது என்றால் சரிதான். இது குறித்து என்றைய தேதியில் ஆய்வாளர் என்னிடம் சொன்னார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் கேட்டது 2014 மே 01 – முதல் 31 வரையில் தான் என்றால் சரிதான். ஆனால் நான் 01.01.2014 முதல் 23.08.2014 வரையில் அவர்கள் கேட்காத ஆவணங்களை கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஆய்வாளர் எந்த தேதியில் ஆவணங்களை பற்றி விசாரணை செய்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் வெவ்வேறு தேதிகளில் தான் இந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்றும் , நான் 2016- ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் தான் இந்த ஆவணங்களை ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் எல்லாம் சரியாகத்தான் இருந்தது என்றும், பின்னிட்டு வழக்கிற்காக மேற்படி ஆவணங்கள் திருத்தப்பட்டன என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஆவணங்கள் அனைத்துமே சிபிசிஐடி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முன் தேதியிட்டு கொடுக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**3- ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை மற்ற எதிரிகள் தமதாக ஏற்றுக்கொண்டனர்.**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை